


# 02.02.2025

## தலைப்புச்செய்திகள்

1. வருமான வரியை மக்கள் முறையாக செலுத்த வேண்டும் என்று நிதிமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. டெல்லி சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை முடிவடைவதால் அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர்.

3. திருச்சியில் நடைபெறும் சாரண சாரணியர் இயக்கத்தின் வைர விழா நிறைவு நாள் நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்றுமாலை பங்கேற்கிறார்.

4. ராமநாதபுரம் பிரப்பன் வலசையில் ஒலிம்பிக் நீர் விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான பணிகள் வரும் புதன்கிழமை தொடங்க உள்ளதாக மாநில அரசு அறிவித்துள்ளது.

5. இந்திய இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5ஆவது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி மும்பையில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

***********

நிர்மலா சீதாராமன்

மத்திய நிதிநிலை அறிக்கையில் அறிவித்த புதிய வருமான வரிசட்டத்தை அடுத்த 6 மாதங்களுக்குள் நடைமுறைபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

பி.டி.ஐ செய்தி நிறுவனத்திற்கு அவர் அளித்த பேட்டியில் நேரடி வரியை எளிமையாக்கி, அதனை இலகுவாக செயல்படுத்துவதே மத்திய அரசின் நோக்கம் என்றார்.

வருமான வரியை முறையாக செலுத்தி நாட்டின் சேவைக்கு பணியாற்ற பொதுமக்கள் முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

***********

குடியரசுதலைவர்

குடியரசுதலைவர் திருமதி திரௌபதி முர்மு உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நாடாளுமன்ற இரு அவைகளிலும் நாளை தொடங்குகிறது.

இத்தீர்மானத்திற்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி வரும் 13ஆம் தேதி பதில் அளிக்கிறார்.

பிரதமரின் பதில் உரையுடன் முதற்கட்ட பட்ஜெட் கூட்டத்தொடர் நிறைவுபெறும்.

2-ம் கட்ட கூட்டத்தொடர் மார்ச் 10ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 4ஆம் தேதிவரை நடைபெறும்.

இந்நிலையில் வக்ஃப் வாரிய சட்ட திருத்த மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் அறிக்கையை அதன் தலைவர் திரு.ஜகதாம்பிகா பால் நாளை தாக்கல் செய்ய உள்ளதாக தெரிகிறது.

***********

## டெல்லி தேர்தல்

டெல்லியில் 70 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான தேர்தல் வரும் 5ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில் இதற்கான பிரச்சாரம் நாளை மாலையுடன் முடிவடைகிறது.

பிஜேபி காங்கிரஸ் ஆம் ஆத்மி உள்ளிட்ட அரசியல் கட்சியினர் உச்சகட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு.நரேந்திரமோடி இன்று ஆர்.கே.புரத்தில் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

காங்கிரஸ் கட்சிதலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே முஸ்த.்.பா பாத் தொகுதியில் பொதுக்கூட்டத்தில் வாக்கு சேகரிக்கிறார்.

ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு.அரவிந்த் கெஜ்ரிவால் டெல்லியின் பல்வேறு பகுதிகளில் இன்று தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் பிரச்சாரமும் நாளை மாலையுடன் நிறைவடைய உள்ள நிலையில் அங்கும் அரசியல் கட்சியினர் தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

***********

## வசந்த பஞ்சமி

வசந்த பஞ்சமி இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு பிரதமர் திரு.நரேந்திரமோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு தலைவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் சரஸ்வதி தேவியை போற்றும் இந்நந்நாளில் நாட்டு மக்களிடையே மகிழ்ச்சி, செழிப்பு, ஞானம் ஆகியவை நிறைந்திருக்க வாழ்த்தியுள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி விடுத்துள்ள செய்தியில் மக்களிடையே மகிழ்ச்சி வளம் நிலைத்திருக்க வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

***********

**மன்சூக் மாண்டவியா**

உடல் பருமன் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு மத்திய இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெவ்வேறு கருப்பொருளை அடிப்படையாக கொண்டு உடல்நலம் சார்ந்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதாக கூறினார்.

***********

**ஆகாஷவாணி**

மத்திய கலாச்சார அமைச்சகம், ஆகாஷவாணியுடன் இணைந்து சிறப்பு பாரம்பரிய இசை ஒலிபரப்பு நிகழ்ச்சியை புதுதில்லி ஆகாஷவாணியில் இன்று தொடங்கியது.

வரும் 16ஆம் தேதிவரை தினமும் காலை 9.30 மணிமுதல் 10.30வரை 21 ஆகாஷவாணி மையங்களில் இருந்து இந்நிகழ்ச்சி நேரடியாக ஒலிபரப்பு செய்யப்படும்.

இளம் கலைஞர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்த ஏதுவாக அதற்கான தளத்தை இந்நிகழ்ச்சி வழங்கும் என்று மத்திய கலாச்சார அமைச்சகத்தின் செயலர் திரு.அருண்சாவ்லா தெரிவித்துள்ளார்.

இம்முயற்சியின் மூலம் 600க்கும் மேற்பட்ட கலைஞர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்த வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாக பிரசார்பாரதி தலைமை நிர்வாக அதிகாரி திரு.கவ்ரவ் திவேதி தெரிவித்துள்ளார்.

***********

## அமிரித் தோட்டம்

குடியரசு தலைவர் மாளிகையில் உள்ள அம்ரித் தோட்டத்தை பொதுமக்கள் இன்றுமுதல் பார்வையிட அனுமதிக்கப்படுகின்றனர்.

மார்ச் 30ஆம் தேதிவரை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை, திங்கட்கிழமை நீங்கலாக இப்பூந்தோட்டத்தை பார்வையிட இணையதளத்தில் முன்பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

***********

## ரயில்

ரயில்களில் முன்பதிவு மற்றும் முன்பதில்லா டிக்கெட்டுகள், நடைமேடை நுழைவு சீட்டு, PNR விவரம் உள்ளிட்டவற்றை எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் **ஸ்வா ரயில்** என்ற புதிய அலைபேசி செயலியை அறிமுகம் செய்ய உள்ளதாக இந்திய ரயில்வே அறிவித்துள்ளது.

இதற்கான சோதனை முயற்சிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும்,

ரயில் துல்லியமாக சென்றுகொண்டிருக்கும் இடம்,

சரக்கு கண்காணிப்பு உள்ளிட்ட பல்வேறு சேவைகளை இந்த செயலி மூலம் பெற முடியும்.

***********

**முதலமைச்சர் - சாரண சாரணியர்**

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் திருச்சி மணப்பாறை சிப்காட் வளாகத்தில் நடைபெறும் சாரண சாரணியர் இயக்கத்தின் வைர விழா நிறைவு நாள் நிகழ்ச்சியில் இன்றுமாலை பங்கேற்கிறார்.

கடந்த 28ஆம் தேதி தொடங்கிய இந்நிகழ்ச்சியில் வெளி மாநிலங்கள், வெளிநாடுகளை சேர்ந்த 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சாரண சாரணிய மாணாக்கர் பங்கேற்றுள்ளனர்.

***********

**உதயநிதிஸ்டாலின்**

கடல்சார் நீர் விளையாட்டுகளை ஊக்குவிக்கும் வகையில் ராமநாதபுரம் மாவட்டம் பிரப்பன் வலசையில் தமிழ்நாடு ஒலிம்பிக் நீர் விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான பணிகள் வரும் புதன்கிழமை தொடங்கும் என்று துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதற்கான அமைவிடத்தை இன்று நேரில் பார்வையிட்ட அவர், 6 ஏக்கர் பரப்பளவில் 42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாய்மர படகு, நீச்சல் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுகளுக்கு இதில் பயிற்சி அளிக்கப்படும் என்று கூறினார்.

**வாய்ஸ்**

***********

**ஈர நிலங்கள் தினம்**

உலக ஈர நிலங்கள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

சதுப்பு நிலங்களையும், நீர் நிலைகளையும் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், கடந்த 1971ஆம் ஆண்டு ஈரானில் ராம்சர் நகரில் இதேநாளில் நடைபெற்ற கூட்டத்தை நினைவு கூறும் வகையில் ஆண்டுதோறும் இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள செய்தியில் தமிழகத்தில் ஈர நிலங்களை பாதுகாக்க அரசு உறுதி பூண்டுள்ளதாக கூறினார்.

நாட்டின் வளமான இயற்கை மரபை காக்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

அரசின் நடவடிக்கைகளால் மாநிலத்தில் ராம்சர் பகுதிகளின் எண்ணிக்கை 20ஆக அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

***********

டி.ஆர்.பி.ராஜா

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி கண்டமங்கலம் பகுதியில் மனவளர்ச்சி குன்றியோருக்கான புதிய கட்டிடத்திற்கு மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா இன்று அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் 70 மாற்றுத்திறனாளிகளுக்கு 3 சக்கர சைக்கிள்களையும் அமைச்சர் வழங்கினார்.

***********

ராமதாஸ்

விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்ய தமிழக அரசே முன்வர வேண்டும் என்று பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் வேளாண் விளைபொருள் கொள்முதல் வாரியம் என்ற புதிய பொதுத்துறை நிறுவனத்தை அரசு தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

***********

**இருவரி**

**விழுப்புரம் மாவட்டத்தில் 2025-26ஆம்** கல்வியாண்டில் புதிய தொழிற்பள்ளிகள் தொடங்கவும், அங்கீகாரத்தை புதுப்பிக்கவும் இணையதளம் வாயிலாக இன்றுமுதல் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் டாக்டர் சி.பழனி தெரிவித்துள்ளார்.

***********

**சேலம்**

சேலம் மாவட்டத்தில் நடப்பாண்டு 70 அரசு பள்ளிகள் நூற்றாண்டு விழாவை கொண்டாட உள்ளன.

ஆக்கப்பூர்வமான சாதனையாளர்களை உருவாக்கி வரும் அரசு பள்ளிகளின் சிறப்பு குறித்து எமது செய்தியாளர் தெரிவிக்கையில்:

**வாய்ஸ்**

***********

**கோவில்**

நெல்லை அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோவிலில் தைப்பூச திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

***********

**கோவில்**

நாமக்கல் மாவட்டம் தும்மங்குறிச்சி பெரியூர் மருதகாளியம்மன் திருக்கோவில் குடமுழுக்கு இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

மாநில அமைச்சர்கள் திரு.சேகர்பாபு, திரு.சக்கரபாணி டாக்டர் மதிவேந்தன் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

திருச்சி சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலில் தைபூச திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

தெப்பத்திருவிழா வரும் 10ஆம் தேதி நடைபெறும்.

***********

**விபத்து**

கடலூர் மாவட்டம் திட்டக்குடி அருகே சென்னை -திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் பயணிகளை ஏற்றிசென்ற வாகனம் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

படுகாயமடைந்த 10க்கும் மேற்பட்டோர் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து குறித்து திட்டக்குடி காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

***********

**கிரிக்கெட்**

இந்திய இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5ஆவது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி மும்பையில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா 3-1 என்ற கணக்கில் தொடரை ஏற்கனவே கைப்பற்றியுள்ளது.

***********

**கிரிக்கெட்**

கோலாலம்பூரில் 19 வயதிற்குட்பட்டோருக்கான ஐ.சி.சி மகளிர் உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் தென்னாப்பிரிக்காவிற்கு எதிராக 83 என்ற வெற்றி இலக்குடன் விளையாடும் இந்தியா சற்றுமுன் 5 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 36 ரன் எடுத்திருந்தது.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

***********